25th September 1961]

Buckingham Canal

* 1820-B *Q.*—Sri N. R. THIAGARAJAN : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னை பக்கிங்ஹாம் கால்வாயில் படகு மூலம் பொது ஜனப் போக்கு வரத்து நடத்த யோசனை இருக்கிறதா ?

The Hon. Sri P. KAKKAN : Yes, Sir. The High Power Technical Committee appointed by this Government to draw up a comprehensive scheme to make the Cooum function as a clean and tidal river and to improve the Buckingham Canal has reported that if the schemes formulated by it are implemented it will permit the plying of passenger and cargo boats from one part of the city to another and relieve the congestion of traffic in the arterial highways. The report is under the consideration of Government.

Sri S. M. ANNAMALAI : இந்தத் திட்டத்திற்கு மத்திய சர்க்கார் ஒத்துக்கொள்ள வில்லை என்று சொல்லப்படுகிறதே, அப்படியாயின் மூன்றுவது ஐந்தாண்டு திட்டத்தில் இதை எடுத்துக்கொள்வதற்காவது வற்புறுத்தப்படுமா ?

The Hon. Sri P. KAKKAN : மத்திய சர்க்கார் ஒத்துக் கொள்ள வில்லை யென்று சொல்ல முடியாது. அவர்கள் கொஞ்சம் பணம் கொடுத்தார்கள். நாம் அது போதாது என்று கேட்டோம். இப்போது மூன்றுவது திட்டத்தில் அதைக் கொண்டு வருவதற்கு சீப்–என்ஜினியரைக் கொண்டு அத்திட்டத்தை விரிவான முறையில் பரிசீலனை செய்து முடிவான அறிக்கையைத் தயார் செய்து அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

Sri S. M. ANNAMALAI : மத்திய சர்க்கார் கொஞ்சம் கொடுத்தார்கள் என்று சொல்கிறுர்களே, மத்திய சர்க்கார் எவ்வளவு பணம் கொடுத்தார்கள் என்று சொல்ல முடியுமா ?

The Hon. Sri P. KAKKAN : பத்து லட்சம்.

Sri N. K. PALANISAMI : இதற்கு மொத்தம் எவ்வளவு செலவாகும் ? இதில் எந்த அளவுக்கு டோக்கன் கிராண்டு அனுமதி செய்யப்பட்டிருக்கிறது ?

The Hon. Sri P. KAKKAN : 120 லட்சம் மொத்தம் என்று சொன்னேன்.

Provision of terminal facilities in Buckingham Canal—Rs. 5 lakhs. Improvements to the Canal and tow path—Rs. 5 lakhs. மேலும் ஜாஸ்தியாக வேண்டுமென்று கேட்கிறேம்.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, arising out of answer given by the Hon. Minister, may I know whether there will be good response if a boat is run in the canal as a competition to the buses?

The Hon. Sri P. KAKKAN : There is rush even in the buses. So I think it is better to take up this scheme also.

Sri A. A. RASHEED : Sir, may I know when the improvements to the canal will be taken up and when the boats will begin to ply ?

The Hon. Sri P. KAKKAN : The scheme will be taken up after finalization.

SRI A. GOVINDASAMY : இந்த பக்கிங்ஹாம் கால்வாயில் விசைப் படகு ஓட்ட வசதி செய்யப்படுமா ? அல்லது சாதாரணப் படகு ஓட்ட வசதி செய்யப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : அதைப் பின்னாலே பார்த்துத்தான் சொல்ல முடியும். முதலில் திட்டம் உருவாகட்டும்.

SRI K. VINAYAKAM : இப்போது கார்கோ படகுதான் அதாவது உப்பு மூட்டை, சவுக்குக் கட்டை முதலியவை ஏற்றிச் செல்வதற்கு அந்தக் கால்வாய் பயன்படுத்தப்படுகிறது. ஆயினும் சென்னைக்குள்ளே இருக்கிற அந்தக் கால்வாய் மூலமாக பிரயாணிகளை ஏற்றி செல்வதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா ? அதனால் நகரிலுள்ள பிரியாண நெருக்கடி குறையாதா மத்திய அரசாங்கம் இதற்கு அனுமதி அளிக்காவிட்டாலும் சென்னை அரசாங்க நிதி பட்ஜெட்டிலேயே சேர்த்து இத் திட்டத்தை பூர்த்தி செய்ய யோசிக்கப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : கார்கோ மட்டும் போவதற்கல்ல. போட்டு போவதற்கும் யோசிக்கப்படுகிறது. கனம் அங்கத்தினர் சொல்கிற மாதிரியும் ஆலோசிக்கப்படும்.

11-30 a.m. SRI T. P. ELUMALAI : பிரயாணிகளுக்கு வசதி செய்து கொடுத்தால் இப்பொழுது போய்க்கொண்டிருக்கும் படகுத் தொழிலாளர்களுக்கு எந்த விதமான பாதகமும் இல்லாமல் சர்க்கார் பார்த்துக் கொள்ளுமா ?

THE HON. SRI P. KAKKAN : மற்றவர்களுக்கு இடையூறு இல்லாத படி கார்கோ போக ஏற்பாடு செய்யப்படும்.

SRI N. K. PALANISAMI : போட்டு போக்குவரத்திற்கு அனுகூல மான முறையில் அதை சரி செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். இப்பொழுது இருக்கக்கூடிய கனாலை எடுத்துக்கொண்டால் வருடத்திற்கு மூன்று மாதங்கள் தான் தண்ணீர் இருக்கிறது. பாக்கியுள்ள மாதங் களில் தண்ணீர் கிடையாது. தண்ணீர் இல்லாமல் போட் எப்படி போகும் ?

THE HON. SRI P. KAKKAN : அதில் வருடம் பூராவும் தண்ணீர் இருப்பதற்கு திட்டத்தில் ஏற்பாடு இருக்கும்.

Ports—Tuticorin—Development of

DEPUTY SPEAKER : Questions 1806 and 1820-C may be taken up together.

*1806 Q.—SRI N. K. PALANISAMI (on behalf of SRI M. KALYANASUNDARAM) : Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) whether the Government of India, Communication Department have recommended to the Planning Commission the inclusion in the Third Five-Year Plan of the scheme of developing Tuticorin into a major port; and

(b) if so, the details thereof ?

THE HON. SRI P. KAKKAN : (a) Yes, Sir.

(b) The Government of India have stated that the scheme has been included in the Third Five-Year Plan and a provision of Rs. 10 crores has been made for the new major ports at Tuticorin and Mangalore.